**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**E.A.65/2014 in EP 4/2013 in RCOP 1/1998**

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

**Deposition of Witness for** **PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | ° | ஆறுமுகம் | தொழில் | ° | டீக்கடை வியாபாரம் |
| தந்தை பெயர் | ° | கிருஷ்ணன் | வயது | ° | 47 |
| கிராமம் | ° | ஆரணி | | ° | |
| தாலுக்கா | ° | ஆரணி | | ° | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01.04.2026. நேரம் - 11.50**

**சாட்சியின் அடையாளம் - ஆதார் அடையாள அட்டையின் மூலம் அடையாளம் காணப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் மேற்படி கிராமத்தில் வசித்து டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். என்னுடைய கூடுதல் நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன்.

**ஆவணங்கள்**

1. அசல் வழக்கு எண்.206/2013 நான் தாக்கல் செய்த தாவா பிராது சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1** ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

2. நான் தாக்கல் செய்த வழக்கு எண்.206/2013ன் இடை மனு 432/2013ல் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2** ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

3. 'அ' அட்டவணை சொத்து தேநீர் கடை நான் நடத்தி வருவதற்கான 2012-2013 பதிவு சான்றிதழ் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3** ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

4. 'அ' அட்டவணை சொத்து தேநீர் கடை நான் நடத்தி வருவதற்கான 2013-2014 பதிவு சான்றிதழ் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4** ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

5. 'அ' அட்டவணை சொத்து தேநீர் கடை நான் நடத்தி வருவதற்கான 2013-2014 தொழில் வரி சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5** ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

6. 'அ' அட்டவணை கடைக்கான மின் கட்டண அட்டை (மின் இணைப்பு எண். 221 007 156) சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.6** ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

7. 'அ' அட்டவணை கடைக்கு பவுனம்மாள் பெயரில் நான் செலுத்திய மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 10) சான்றிட்ட நகல்கள் **ம.சா.ஆ.7** ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

8. நான் கடன் பெற்ற சிண்டிகேட் வங்கி கடனுக்கான கணக்கு பட்டியல் 5 ஏப்ரல் 2013 முதல் 13 நவம்பர் 2013 வரையான சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.8** ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

9. RCOP 1/2014 நான் தாக்கல் செய்த மனுவின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.9** ஆகவும்,

10. அசல் வழக்கு 206/2013ல் 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த பதிலுரையின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.10** ஆகவும்,

11. அசல் வழக்கு 206/2013ல் 4ம் எதிர்மனுதாரரான மைதிலியின் வாய்மொழி சாட்சியத்தின் (முதல் விசாரணை, குறுக்கு விசாரணை மற்றும் நிரூபண பிரமாண வாக்குமூலம் ) சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.11** ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

12. RCOP 1/1998 மனுவில் முதல் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.12** ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

13. RCOP 1/1998ல் முதல் எதிர்மனுதாரர் அளித்த வாய்மொழி சாட்சியம் (முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை) சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.13** ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

14. RCOP 1/1998ல் 16.04.1999 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.14** ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

15. 7ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து RCA 2/1999ல் 29.04.2004 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.15** ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

16. நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த மனுவின் அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீது **ம.சா.ஆ**.16 ஆகவும், (அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது).

17. நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த மனுவினை ஆரணி நகராட்சி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **ம.சா.ஆ**.17 ஆகவும்,

18. 16.08.2019 அன்று நான் கோரிய தகவல்களுக்கு உரிய பதிலை ஆரணி நகராட்சி வழங்கிய தகவல் மற்றும் அஞ்சல் உறை அசல் **ம.சா.ஆ**.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிர்மனுதாரர்கள் வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**நேரம் - 12.20**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni